முருகப்பெருமான் துணை

**மகான் புலத்தீசர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

30.12.2022, வெள்ளிக்கிழமை

1. வள்ளலே தவயோக ஞானியே
வையகம் காத்திட வந்தநல்
வள்ளலே ஆறுமுக அரங்கனே
வரமென அனுகூல ஆசிதனை
2. ஆசிதனை புலத்தீசர் யானும்
அருளுவேன் சுபகிருது சிலை திங்கள்
ஆசிபட மூவை திகதி புகர் வாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 15 ம் நாள் 30.12.2022, வெள்ளிக்கிழமை)
அரங்கன் தொண்டர் படைகள் தனக்கு
3. தனக்கு ஆற்றல் பெருகிட
தக்க வழிவகை உரைப்பேன்
இணக்கமாய் இன்னும் தொண்டர்கள்
இயல்புநிலைக்கு வந்து நன்கு
4. வந்துமே சமத்து நிலைபட
வகுப்பு பேதம் ஏதுமின்றி
சிந்தைதனில் அனைவரும் சமம்
சிவராஜயோகியின் சேய்களே நாமென
5. நாமென உணர்வு கூட்டியே
நலிவில் கடைநிலையில் உள்ளவரும்
நேமமிக்க உயர் மாந்தனே என
நடுநிலை சமநிலை நம்பிக்கைபட
6. நம்பிக்கைபட சேவை தன்னை
நாட்டிடுவேன் தொடர வேண்டும்
நம்பிக்கை வைத்து அரங்கனே
ஞானத்தலைவனே என ஏற்று
7. ஏற்றுமே மாதரும வழிகளை
எந்தவித எதிர்பார்ப்பும் இள்றி
பற்றுவைத்து ஆற்றல்படவே
பாவகருமம் அகலும்படி சேவை
8. சேவைதனை அனைத்து திக்கிலும்
செப்பிடவே விரிவாகச் செய்து
அவனியில் சமத்துவ சன்மார்க்கம்
அளவிலா ஆற்றல் கொண்ட
9. கொண்ட உண்மை மார்க்கம்
குருவரங்கன் மார்க்கமே என
தொண்டர்கள் உணர்ந்து உணர்ந்து தெளிந்து
தொண்டர்களிடை முதலில் சமரசம்

10. சமரசம் சகோதரத்துவமிக்க
சரணாகதியாக மாற்றம் நிகழ
சமரச சன்மார்க்க நெறியும்
சகஜமாய் உலகளாவிய வண்ணம்

11. வண்ணம் அரங்கன் நோக்கமாக
வளர்ந்து விரிந்து நன்கு
அண்ணலின் ஞானத்தலைமையும்
ஆற்றல்மிக்க ஞான ஆட்சியுமாக மாற்றும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–